# பத்திரிக்கை செய்தி

## <u>பத்திர சான்றொப்பமிட்ட நகல் கொடுக்க லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் அப்போதைய சார் பதிவாளருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை</u>

புகார்தாரர் ரவி அசோகன், காக்கமூர், சுசீந்திரம், கன்னியாகுமரி மாவட்டத்தில் வசித்து வந்தார். புகார்தாரர் தனது சொத்தின் பத்திர சான்றொப்பமிட்ட நகல் கேட்டு, இடலாக்குடி சார் பதிவாளர் அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.சுயம்புலிங்கம், சார்பதிவாளர், இடலாக்குடி, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.2,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, கன்னியாகுமாரி பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.சுயம்புலிங்கம் புகார்தாரரிடமிருந்து ரூ.2,000/- லஞ்சப்பணம் பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது நாகர்கோவில் முதன்மை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் நேற்று 25.03.2025 திரு.சுயம்புலிங்கம், சார்பதிவாளருக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் மொத்தம் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.